**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. 56/2023**

**பி. வா.சா. 1 - இந்திரா**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the day of 05.11.2025.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**.

ரீசர்வே எண், 100/16 ல் இருக்கும் சொத்து வாதியின் பூர்வீக சொத்து என்றால் சரிதான் வாதியின் தாத்தா காலத்தில் உள்ள சொத்து. வழக்கு பட்டிகை சொத்தில் எனக்கு உரிமை கிடையாது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணையிலும் எதிர்வழக்குரையிலும் வழக்கு பட்டிகை சொத்தில் எனக்கு உரிமையிருப்பதாக நான் கூறவில்லை என்றால் சரிதான். ரீசர்வே எண். 100/17 எங்களுடைய செந்தில் வினாயகர் திருக்கோவில் டிரெஸ்டு சொத்து என்று உரிமை கோருகிறோம். மேற்படி ரீசர்வே எண். 100/17 ல் உள்ள சொத்து டிரெஸ்டுக்கான சொத்து என்றால் சரிதான். மேற்படி ரீசர்வே எண். 100/17 ல் எனக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. ரீசர்வே எண். 100/17 ல் 1½ சென்ட் விலைக்கு வாங்கியுள்ளோம். யாரிடம் இருந்து விலைக்கு வாங்கினோம் என்றால் மேற்படி டிரெஸ்டில் இருந்து வாங்கவில்லை அனந்தம் பிள்ளை வாரிசுகளிடம் இருந்து வாங்கினோம்.

மேற்படி டிரெஸ்டு எங்களுக்கு கிரயம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். ரீசர்வே எண். 100/17 ல் டிரெஸ்டுக்கு எவ்வளவு சொத்து உரிமை உள்ளது என்றால் 5½ ஏர் சுமார் 13, 14 சென்ட் வரும். மேற்படி 13, 14 சென்ட்டில் 1½ சென்ட் எந்த பகுதியின் இருந்து கிடைத்தது என்பதற்கான ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது தாக்கல் செய்துள்ளேன். மேற்படி 1½ சென்ட்டு வாங்கியதாக கூறப்படும் ஆவணம் பி.வா.சா.ஆ.2 ஆக ஆட்சேபனையுடன்

குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ஆவணம் 05.02.2022 தேதியிட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ல் 2 லட்சத்தி 50 ஆயிரம் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ல் கதவு எண்.5/8 மெயின் ரோட்டில் இருக்கும் மனையும் வீடும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 அனந்தம் பிள்ளையின் வாரிசுகள் 2 லட்சத்தி 50 ஆயிரம் என்னிடம் பெற்றுக்கொண்டு எழுதிக் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

மேற்படி அனந்தம் பிள்ளைக்கு மேற்படி டிரெஸ்டு இடத்தை கொடுத்ததாக ஆவணம் குறித்து தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி ஆவணம் குறித்து நான் விசாரிக்கவும் இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ரீசர்வே எண். 100/17 ன் கீழ் தான் கதவு எண். 5/18 இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அனந்தம் பிள்ளைக்கு டிரெஸ்டிடம் இருந்து சொத்து கொடுக்கப்பட்டிருந்தால் டிரெஸ்டு உறுப்பினர்களின் கையொப்பம் இட்டு ஆவணம் கொடுக்கப்பட்டிருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நாங்கள் மேற்படி ரீசர்வே எண். 100/17 ல் நாங்கள் வசிப்பதாக டிரெஸ்டிடம் தெரிவித்தோமா என்றால் தெரிவித்தோம். மேற்படி டிரெஸ்டில் இருந்து அனுமதி கடிதம் கிடைத்ததா என்றால் அறிவிப்பு ஒன்று கொடுத்தார்கள். மேற்படி அறிவிப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் டிரெஸ்டில் அனுமதி இல்லாமல் டிரெஸ்டு சொத்தில் ஆக்கிரமிப்பு செய்து வைத்திருக்கிறோம் என்றால் சரியல்ல டிரெஸ்டில் இருந்து எனது கணவர் பெயரில் அறிவிப்பு ஒன்று அனுப்பியுள்ளார்கள் மேற்படி வீட்டிற்கு வாடகை கட்ட சொல்லியும் அதற்கு ரசீது கொடுக்கப்படும் என்று கூறியும் அனுப்பியுள்ளார்கள் எனவே அனுமதியுடன் தான் இருக்கிறோம்.

எனக்கு மேற்படி அனுமதி எழுத்து பூர்வமாக கிடைக்கப்பெறவில்லை அதனை நான் தாக்கல் செய்யவும் இல்லை என்றால் 2014 ல் எழுத்து பூர்வமாக அறிவிப்பு அனுப்பியிருந்தார்கள் அதனை தாக்கல் செய்யலாம். பி.வா.சா.ஆ.2 நான் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்து 100/17 குறித்தது அல்ல என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1ல் சுசீந்திரம் அக்கரை செட்டித்தெரு நயினார் செந்தில் விநாயகர் மற்றும் சுடலைமுத்து கோனார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது வாதியின் தாத்தா என்றால் அது பற்றி தெரியாது. ராதாகிருஷ்ணன் - வசந்தா என்பர் அனந்தம்பிள்ளையின் வாரிசு. பி.வா.சா.ஆ.2 ல் அனந்தம் பிள்ளையின் மகன் மனோன்மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி மனோன்மணி பி.வா.சா.ஆ.1ல் குறிப்பிடப்பட்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி பி.வா.சா.ஆ.1 மற்றும் 2 வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் இடிக்கப்பட்டிருக்கும் சுவரின் வலது பக்கம் இருப்பது வாதியின் மாட்டுத்தெழுவம் என்றால் சரிதான். **மேற்படி புகைப்படம் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

வாதி எங்களின் இடத்தை ஆக்கிரமிப்பு செய்தது குறித்து டிரெஸ்டிடம் புகார் கொடுத்தேனா என்றால் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். மேற்படி புகாரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்களுக்கு உரிமைப்பட்டதாக சொல்லக்கூடிய சொத்தை நாங்கள் அளந்து பார்க்கவில்லை என்றால் சரிதான். இடத்தை அளந்து பார்க்காமல் வாதியின் இடம் ரீசர்வே எண். 100/17 ன் கீழ் வருகிறது என்று நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. டிரெஸ்டின் இடத்தை ஆக்கிரமித்து வைத்திருப்பது போல வாதியின் இடத்தையும் ஆக்கிரமிக்கும் நோக்கில் வாதியின் இடத்தில்

காம்பவுண்டு கட்ட விடாமல் தடுத்திருக்கிறேன் என்றால் சரியல்ல. ரீசர்வே எண். 100/17 ன் கீழ் நான் சொல்லும் மெயின் ரோடு இல்லை என்றால் சரியல்ல. நான் வாதியை கஷ்டப்படுத்தும் நோக்குடன் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல 15 வருடமாக நாங்கள் ரீசர்வே எண்.100/17 ல் தான் வசித்து வருகிறோம். நாங்கள் புறம்போக்கு இடத்தை கையில் வைத்து அரசியல் வாதிகளை கையில் வைத்துக் கொண்டு வாதியை கஷ்டப்படுத்தும் நோக்குடன் செயல்பட்டு வருகிறோம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனக்கு ரீசர்வே எண். 100/17 ல் உரிமையில்லை என்றால் சரியல்ல. நான் டிரெஸ்டு சொத்தை ஆக்கிரமித்து வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**